இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 81 – ஒலி : 274 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – வைகாசி 01 – திங்கள்கிழமை 15 மே 2023 – சென்னை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 81 - Issue 274: Thiruvalluvar Year - 2054 - Vaikasi 01 - Monday 15 May 2023 - Chennai 12 Pages ₹ 5.00





முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (14.05.2023) அன்னையர் தினத்தையொட்டி கோபாலபுரம் இல்லத்திற்குச் சென்று தனது தாயார் திருமதி தயாளு அம்மாள் அவர்களிடம் வாழ்த்துப் பெற்றார். திருமதி துர்கா ஸ்டாலின் உடனுள்ளார்.

### உயிருக்கும் மேலாய் அன்பு செலுத்திடும்

## தாயை மதிப்போம் - எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவோம்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் அன்னையர் தின வாழ்த்து!


**சென்னை, மே 15-**

**உயிருக்கும் மேலாய் அன்பு செலுத்திடும் தாயை மதிப்போம் - எதிர்பார்ப்புகளையும் விருப்பங்களையும் நிறைவேற்றுவோம் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அன்னையர் தினத்தையொட்டி சமூக வலை தளங்களில் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தி வருமாறு:-

**உடலுக்குள் இன்னொரு உயிராய் நம்மைச் சுமந்து, உயிருக்கும் மேலாய் அன்பு செலுத்திடும் அன்னையர் அனைவர்க்கும் அன்னையர் தின வாழ்த்துகள்!**

**அன்பினால் அவனியை நிறைக்கும் தாயின் எதிர்பார்ப்புகளையும் விருப்பங்களையும் மதிப்போம், நிறைவேற்றுவோம்!**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (14.05.2023) அன்னையர் தினத்தையொட்டி கோபாலபுரம் இல்லத்திற்குச் சென்று தனது தாயார் திருமதி தயாளு அம்மாள் அவர்களிடம் வாழ்த்துப் பெற்றார்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

### முதல்வரின் காலை உணவு திட்டத்தால்

## அரசுப் பள்ளிகளில் மாணவர்கள் வருகை 85% அதிகரிப்பு!

### சமூக நலத்துறை அதிகாரிகள் தகவல்!


**சென்னை, மே 15 -**

**முதல்வரின் காலை உணவு திட்டத்தால் பள்ளிகளில் மாணவர்களின் வருகை 85 சதவீதம் அதிகரித்துள்ளதாக சமூக நலத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.**

தமிழ்நாட்டில் அரசு பள்ளிகளில் பயிலும் 1 முதல் 5 வகுப்பு வரையிலான மாணவ - மாணவிகளுக்கு காலை சிற்றுண்டி அளிக்கும் வகையில் “முதல்வரின் காலை உணவு திட்டம்” அறிவிப்பை சட்டப்பேரவையில் கடந்தாண்டு மே 5ம் தேதி முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார்.

அதன்படி, மாநகராட்சி, நகராட்சி, ஊராட்சி மற்றும் மலைப்பகுதிகளில் உள்ள 1,545 அரசு தொடக்கப்பள்ளிகளில் 1 லட்சத்து 14 ஆயிரத்து 95 மாணவர்கள் பயன்பெறும் வகையில் காலை உணவு திட்டம் கடந்த ஆண்டு செப்.15ம் தேதி தொடங்கப்பட்டது.

இந்த திட்டம் பலரின் வரவேற்பையும், பாராட்டையும் பெற்ற நிலையில் “முதல்வரின் காலை உணவுத்திட்டம்” கூடுதலாக 433 பள்ளிகளுக்கு விரிவாக்கம் செய்யப்பட்டது. தற்போது இத்திட்டத்தின் கீழ் 1,969 பள்ளிகளில் பயிலும் 1லட்சத்து 54 ஆயிரத்து 108 மாணவர்கள் பயனடைந்து வருகின்றனர்.




இந்த திட்டம் சென்னை மாநகராட்சி பகுதிகளில் மாநகராட்சி ஆணையர் மூலமாகவும், சென்னை தவிர பிற மாநகராட்சிகளில் நகராட்சி நிர்வாக துறை மூலம் ஒருங்கிணைந்த சமையல் கூடங்கள் வாயிலாகவும் செயல்படுத்தப்படுகிறது. மேலும் கிராம ஊராட்சிகள் மற்றும் மலைப்பகுதிகளில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மூலம் கிராம பஞ்சாயத்துகள் அல்லது மகளிர் சுய உதவி குழுக்கள் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மாணவர்கள் பசியின்றி பள்ளிக்கு வருவதை உறுதி செய்ய வேண்டும் என்பதே இந்த திட்டத்தின் நோக்கம். மேலும் மாணவ, மாணவிகள் ஊட்டச்சத்து குறைபாட்டினால் பாதிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்யவும், மாணவர்களின் ஊட்டச்சத்து நிலையை உயர்த்தவும், ரத்தசோகை குறைபாட்டினை நீக்கவும், வேலைக்கு செல்லும் தாய்மார்களின் பணிச் சுமையை குறைக்க வேண்டும் என்பதே திட்டத்தின் குறிக்கோள்கள்.

இவற்றுடன் பள்ளிகளில் மாணவர்களின் வருகையை அதிகரித்து அவர்களின் கல்வி திறனை அதிகரிப்பதும் இந்த திட்டம் தொடங்கப்பட்டதின் முதன்மை நோக்கங்களில் ஒன்று. இத்திட்டம் முதல் கட்டமாக கடந்த ஆண்டு செப்.15ம் தேதி செயல்படுத்தப்பட்ட பள்ளிகளில் கடந்த 6 மாதங்களில் மாணவர்களின் வருகை மொத்தமாக 85 சதவீதம் அதிகரித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இதுகுறித்து, சமூக நலத்துறை அதிகாரிகள் கூறியதாவது: -

முதல்வரின் காலை உணவு திட்டம் செயல்படுத்தப்பட்ட பள்ளிகளில் ஆய்வு செய்த போது 1540 பள்ளிகளில் 1,319 பள்ளிகளில் மாணவர்களின் வருகை அதிகரித்துள்ளது. அதன்படி 624 பள்ளிகளில் 0 முதல் 10 சதவீதமும், 462 பள்ளிகளில் 10 முதல் 20 சதவீதமும், 171 பள்ளிகளில் 20 முதல் 30 சதவீதம் வரையும் மாணவர்களின் வருகை அதிகரித்துள்ளது. மேலும் திட்டம் செயல்படுத்தப்பட்ட பள்ளிகளையும் அதே பகுதியில் திட்டம் செயல்படுத்தப்படாத பள்ளிகளையும் ஒப்பிடும் போது 77 சதவீதம் காலை உணவு வழங்கப்படும் பள்ளிகளில் மாணவர்களின் வருகை அதிகரித்துள்ளது. இந்த திட்டம் பொதுமக்களிடமும், குறிப்பாக பெற்றோர்களிடம் மிகுந்த வரவேற்பை பெற்றுள்ளது. சுய உதவிக் குழுக்களில் சீரான பொருளாதார நடவடிக்கைகள் சாத்தியமாகியுள்ளது.

இத்திட்டத்தை கண்காணிக்க ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு ஒருங்கிணைப்பு அலுவலர் நியமிக்கப்பட்டுள்ளார். மேலும் ஒரு பிரத்யேக செயலி உருவாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் சமையல் கூடங்களில் உணவு தயாரான நேரம், பள்ளிக்கு உணவு கொண்டுவரப்பட்ட நேரம், உணவின் தரம் உள்ளிட்ட அனைத்து தகவல்களும் உடனுக்குடன் பதிவேற்றப்படும். இந்த தகவல்களை ஆணையர் உள்ளிட்ட அனைத்து அதிகாரிகளும் கண்காணிப்பர். தமிழ்நாடு முழுவதும் இந்த திட்டம் செயல்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான பணிகள் நடந்து வருகிறது. ஒருங்கிணைந்த சமையல் கூடங்கள் இல்லாத பகுதிகளில் புதிய கட்டிடங்கள் கட்டும் பணிகள் நடந்து வருகிறது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

### உலகிலேயே முதல்முறையாக

## ஸ்காட்லாந்தில் தானியங்கி பேருந்து சேவை தொடக்கம்!

*எடின்பர்க், மே 15 -*

உலகிலேயே முதல்முறையாக பிரிட்டனின் முதல் தானியங்கி பேருந்து சேவை ஸ்காட்லாந்தில் தொடங்கப்பட்டுள்ளது. இந்த பேருந்து ஸ்காட்லாந்தின் ஃபோர்த் ரோடு பாலத்தின் வழியாக பயணிகளை ஏற்றிக் கொண்டு தனது முதல் பயணத்தை மேற்கொண்டது.

இத்திட்டத்தின் சோதனை முயற்சியாக இன்வெர்கீதிங், ஃபைஃப் மற்றும் எடின்பர்க் பூங்காவிற்கு அருகிலுள்ள பெர்ரி டால் வரை பேருந்து சேவை இயக்கப்படுகிறது. ஸ்காட்லாந்தின் போக்குவரத்து அமைச்சர் கெவின் ஸ்டீவர்ட் இந்த பேருந்தில் முதல் பயணியாக பயணம் செய்தார்.

மேலும், 2025ம் ஆண்டு வரை சோதனை அடிப்படையில் ஓட்டுனர் இல்லாத ஐந்து தானியங்கி பேருந்துகள் இயக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பேருந்திலும் வாகனத்தைக் கட்டுப்படுத்தக்கூடிய ஒரு பாதுகாப்பு ஓட்டுநர் மற்றும் டிக்கெட் விற்பனையாளர்



என இரண்டு பணியாளர்கள் இருப்பார்கள் என்றும் கூறப்பட்டுள்ளது.

ஸ்டேஜ்கோச் தானியங்கி பேருந்துகள் எதிர்வினை நேரத்தைக் குறைப்பதன் மூலம் பாதுகாப்பை மேம்படுத்தும் என்றும் வாரத்திற்கு சுமார் 10,000 பயணிகள் பயணம் செய்யும் திறன் கொண்டதாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### வங்கக் கடலில் உருவான

## மோக்கா புயல் கரையைக் கடந்தது!

### வங்கதேசத்தில் பலத்த மழை!

டெல்லி, மே 15 –

வங்கக் கடலில் உருவான அதி தீவிர புயலான மோக்கா புயல் நேற்று பிற்பகல் கரையை கடந்தது.



சென்னை வானிலை ஆய்வு மையம் சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிவிப்பில் கூறியிருப்பதாவது: மோக்கா புயல் வடக்கு திசையில் நகர்ந்து வெள்ளிக்கிழமை மிகத் தீவிர புயலாக மாறி மத்திய மற்றும் அதனையொட்டிய தென்கிழக்கு வங்கக்கடல் பகுதிகளில் மையம் கொண்டிருந்தது. அதாவது போர்ட் பிளேயரில் இருந்து சுமார் 530 கி.மீ. மேற்கு வடமேற்கே நிலை கொண்டுள்ளது.

இது வடக்குவட கிழக்கு திசையில் நகர்ந்து மத்திய கிழக்கு வங்கக்கடல் பகுதிகளில் மேலும் வலுப்பெற்று நேற்று (ஞாயிற்றுக்கிழமை) நண்பகல் தென்கிழக்கு வங்கதேசம் மற்றும் வடக்கு மியான்மர் கடற்கரையை நோக்கி 150 கி.மீ. முதல் 175 கி.மீ. வேகத்தில் கடந்தது.

### முதல்வர் - தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில்

## தி.மு.கழக மாவட்டச் செயலாளர்கள் கூட்டம்!

### தொகுதிப் பார்வையாளர்கள் பங்கேற்பு! காணொலி மூலம் நடைபெற்றது!

**சென்னை, மே 15 -**

**கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று காலை தி.மு.க. மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் காணொலி மூலம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தி.மு.க. மாவட்டச் செயலாளர்கள், தொகுதி பார்வையாளர்கள் பங்கேற்றனர்.**

தி.மு.க. தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் தி.மு.க. மாவட்டச் செயலாளர்கள் மற்றும் தொகுதி பார்வையாளர்கள் கூட்டம் 14.05.2023 - ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 11.00 மணியளவில் காணொலி மூலம் நடைபெறும் என்று தலைமைக் கழகம் அறிவித்திருந்தது.

அதன்படி, கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் தி.மு.க. மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் காணொலி மூலம் நேற்று காலை நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தி.மு.க. மாவட்டச் செயலாளர்கள், தொகுதி பார்வையாளர்கள் பங்கேற்றனர்.

அப்போது கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் - மாவட்டச் செயலாளர்கள், தொகுதி பார்வையாளர்களிடத்தில் கழக ஆக்கப் பணிகள் குறித்தும், முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா, கழக உறுப்பினர்கள் சேர்த்தல் நிலவரம் குறித்தும் கேட்டறிந்ததுடன் பல்வேறு ஆலோசனைகள் வழங்கினார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (14.05.2023) முகாம் அலுவலகத்தில், காணொலி மூலமாக நடைபெற்ற மாவட்டக் கழகச் செயலாளர்கள் மற்றும் தொகுதி பார்வையாளர்கள் கலந்தாலோசனைக் கூட்டத்தில் பேசினார்.